ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2140/15 - 2019 සැප්තැම්බර් මස 09 වැනි සඳුදා - 2019.09.09

*2140/15 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 09 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1996 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, இலங்கைத் தொலைத்தொடர்பு (திருத்தம்) சட்டம்**

*68 (அ) (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1996 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, இலங்கைத் தொலைத்தொடர்பு (திருத்திம்) சட்டத்தின் 68 (அ) (1) ஆம் பிரிவினால் எனக்கு உரித்தாக்கபட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் இலங்கைத் தொலைத்தொடர்பு ஒழுங்குப்படுத்தல் ஆணைக்குழுவின் விடயப்பரப்பிற்குரிய விடயப்பொறுப்பு அமைச்சர் என்ற வகையில் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாதுகாப்பு அமைச்சராகிய நான், தாமரைக் கோபுர செயற்திட்டத்தின் இரண்டாம் கட்ட அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு தேவையான நில அளவையாளர் நாயகத்தின் CO/ COL/ 2018/ 703 ஆம் இலக்கமுடைய விளக்கப்படத்தின் “A” எழுத்தில் குறிக்கின்ற கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாசொத்தினை கையகப்படுத்துவதற்கு இத்தால் அனுமதிக்கின்றேன்.*

மைத்திரிபால சிறிசேன,
பாதுகாப்பு அமைச்சர்.

கொழும்பு,
*2019, ஒகத்து 19.*


*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**விளக்கப்படம்**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவு, சுதுவெல்ல கிராம அலுவலர் பிரிவு, இலக்கம் 24, சுதுவெல்ல கிராமத்தில் கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தின் இலக்கம் CO/ COL/ 2018/703 ஆம் இலக்கம், கொண்ட விளக்கப்படத்தின் "A" எழுத்தில் குறிக்கின்ற சுமார் 1.2141 ஹெக்டயர் விஸ்தீரணத்தைக் கொண்ட காணிப் பகுதி.

1. துண்டு இலக்கம் : துண்டு எழுத்து A ;
   காணியின் பெயர் : வரிப்பண இலக்கம் 300 (பகுதி) டி ஆர். விஜேவர்தன மாவத்தை ;
   விஸ்தீரணம் : 1.2141 ஹெக்டெயார்.

2. எல்லைகள்

   வடக்கு : உரிமைகோருபவரை தேட முடியாத டி.ஆர் விஜேவர்தன மாவத்தை வரிப்பண இலக்கம் 300 காணி (பகுதி) மற்றும் டி. ஆர். விஜேவர்தன மாவத்தை ;
   கிழக்கு : டி. ஆர். விஜேவர்தன மாவத்தை, மற்றும் கொ. 9401 ஆவது முதல் வரைபடத்தின் துண்டு இலக்கம் 1 ;
   தெற்கு : கொ. 9401 ஆவது முதல் வரைப்படத்தின் துண்டு இலக்கம் 1 மற்றும் பேரே குளம் ;
   மேற்கு : பேரே குளம் மற்றும் உரிமைகோருபவரை தேட முடியாத டி. ஆர். விஜேவர்தன மாவத்தை வரிப்பண இலக்கம் 300 (பகுதி) கொண்ட காணி.

09-771

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.